

# ஹைக்கூ திண்ணை

5

மே 2021

தமிழ்நெஞ்சம்

&

உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்

இணைந்து வழங்கும் "ஹைக்கூ திண்ணை"

# ஹைக்கூ திண்ணை

மின்னிதழ் 5 மே 2021


ஆசிரியர் :

கா.ந.கல்யாணசுந்தரம்



ஆசிரியர் குழு :

அனுராஜ்

முனைவர் வே.புகழேந்தி

ரசிகுணா

சாரதா க.சந்தோஷ்

அன்புச்செல்வி சுப்புராஜு

இளவல் ஹரிஹரன்








ஆலோசகர்கள் :

தமிழ்நெஞ்சம் அமின்

குமரன் அம்பிகா

யுகபுத்திரன்

முனைவர் ம.ரமேஷ்







**இவ்விதழில்**
**ஹைக்கூ, லிமரைக்கூ, ஹைபுன், சென்ரியு**
**வகைமைகள் இடம்பெற்றுள்ளன.**

**தமிழ்நெஞ்சம்**

&

**உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்**

இணைந்து வழங்கும் "ஹைக்கூ திண்ணை"

ஆசிரியரின்

# திண்ணைப்பேச்சு

வணக்கம்

உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம், சென்னை மற்றும் தமிழ்நெஞ்சம், பிரான்சு இணைந்து மே 2021 முதல் ''ஹைக்கூ திண்ணை'' மின்னிதழை மாறுபட்ட வடிவமைப்புடன் வெளியிடுவதில் மகிழ்கிறேன்.

உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம் முகநூல் குழுமத்தில் பதிவாகும் ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ, ஹைபுன் வகைமையிலிருந்து தேர்வு செய்யப்பட்டு மின்னிதழ் இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது. கவிஞர்கள் தொடர்ந்து தரமாக சிந்தித்து ஹைக்கூ மற்றும் அதன் வகைமைக் கவிதைகளை எழுதி வாருங்கள். வரவேற்கிறோம். அடுத்த இதழ் மேலும் பொலிவுடன் பிரான்சு தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் வடிவமைப்பில் தொடர்கிறது. வாசகர்களின் கருத்துகளை வரவேற்கிறோம்.

அனைவருக்கும் வாழ்த்துகளும் நன்றியும்.

அன்பன்,

**கா. ந. கல்யாணசுந்தரம்**
ஆசிரியர்
மற்றும் குழுவினர்.

# ஹைக்கூவில் ஜென்

தமிழில் : ராஜூ ஆரோக்கியசாமி






ஜென் என்பது விதிமுறைகள் இல்லாத,குறிப்பிட்ட பயிற்சிகள் இல்லாத ஒரு தன்மை. அது வரையறுக்கப்படாத பாதை. ஜென் என்பது எளிமை, இயல்பான தன்மை மற்றும் சிக்கன நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, ஜப்பானிய கலாச்சாரத்தில் ஒரு முக்கிய சக்தியாக இருந்து வருகிறது.

ஜென்னில் உள்ளார்ந்த ஒன்பது குணங்கள் மற்றும் இந்த குணங்கள் ஹைக்கூவின் எழுத்துடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை இங்கே பார்ப்போம்.

## 1. ஒருமை

“நான் ஒருபோதும் உருவாக்காத உலகில் தனியாகவும் பயமாகவும்” இருக்கும், நம்முடைய பிரிவினை உணர்விலிருந்து நமது துன்பம் எழுகிறது என்று ஜென் கற்பிக்கிறது. நமது சொந்த இயல்பின் ஒற்றுமையையும், நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றின் தன்மையையும் அனுபவிப்பதன் மூலம்

இந்த பிரிவினை உணர்வை கலைப்பதற்கான ஒரு வழியாக ஹைக்கூ பயிற்சி உள்ளது. பாஷோ ஒரு சீடருக்கு எழுதியது போல்: “பைனில் இருந்து பைன் பற்றியும், மூங்கில் இருந்து மூங்கில் பற்றியும் கவிஞர் அறிய வேண்டும்.” கவிதை தன்னை உருவாக்கும் வகையில் பொருளுக்குள் நுழையுங்கள், கவியும் பொருளும் ஓர்மையில் அமையுமுமாறு.

ஆலங்கட்டி ஒலி -
எப்போதும் போலவே இருக்கிறேன்
பழைய கருவாலி மரம்
- பாஷோ

## 2. நெருக்கம்

நெருக்கம் என்பது பின்வாங்குவதில்லை, ஆனால் நெருங்கி வருவது. ஹைக்கூவுடன் நாம் எப்போதும் விஷயங்களுக்கு அருகில் நெருங்கி வருகிறோம். நமது தனிப்பட்ட அக்கறைகளை நாம் பொருத்திக்கொள்வதை நிறுத்தும்போது, நாம் உலகிற்கு நம்மைக் கொடுக்கலாம். ஹைக்கூ எழுதுவதற்கு இது ஒரு பரபரப்பான தெருவில் நடந்து கொண்டிருந்தாலும் அல்லது ஒரு நண்பருடன் அமைதியாகப் பேசினாலும், நாம் நமது சூழலுடன் முற்றிலும் ஒத்திசைந்தாக வேண்டும் என்பதாகும்.

விருந்தோம்பி, விருந்தினர்
எந்த வார்த்தையும் பேசவில்லை,
மற்றும் வெள்ளை செவ்வந்தியும்
- ரியோட்டா

## 3. வெறுமை

ஜென் நிறுவனர் போதிதர்மா, தெற்கு சீனாவின் பேரரசரை சந்தித்தபோது, பக்தியுள்ள பேரரசர் அவரிடம்,

“பௌத்த மதத்தின் அடிப்படை போதனை என்ன?” போதிதர்மா பதிலளித்தார், “பரந்த வெறுமை மற்றும் புனிதமானது எதுவுமில்லை”. இந்த புரட்சிகர அறிக்கை பல யுகங்களாக எதிரொலித்தது, அதன் உண்மை இப்போது குவாண்டம் இயற்பியலால் விளக்கப்பட்டுள்ளது: அணுக்கள் - பிரபஞ்சத்தின் அடிப்படை விஷயங்கள் - 99.999% வெறுமை. விஷயங்கள் அப்படித்தான். இந்த உலகத்தின் விஷயங்கள் நமக்கு தங்களை வெளிப்படுத்திக் கொள்ள நாம் காலியாக இருக்க வேண்டும்.

காற்று, அலைகளில்லா நள்ளிரவு
வெற்றுப்படகில் நிரப்பப்படுகிறது
நிலவொளி
- டோஜென்

## 4. அடிப்படைப் பண்பு

பிரபஞ்சத்தின் மிகப்பெரிய மர்மம் என்னவென்றால், அடிப்படை வெறுமையிலிருந்து அதிர்ச்சியூட்டும் பல்வேறு வடிவங்கள் எழுகின்றன. நவீன ஜென் ஆசிரியரான யசுதானி-ரோஷி சொல்வது போல், “உலகளாவியத்தின் அசல் முகம் விரிவான விவரங்களில் விறுவிறுப்பாக நகர்கிறது.”

வசந்த காலக் குளிர்
தொடர்ந்து இருமுகிறார்
பொம்மலாட்டக்காரர்
- சுய்ஹா

## 5. தனித்துவம்

ஆர்.எச். பிளைத் உறுதிப்படுத்துகிறார், «வேர்ட்ஸ்வொர்த்தின் அந்த’நேரப்புள்ளிகள் ‘என்று அழைப்பதை ஹைக்கூ பதிவுசெய்கிறது. அந்த தருணங்கள் சில மர்மமான காரணங்களுக்காக

ஒரு விசித்திரமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன». ஹைக்கூ கொண்டாடுகிறது, சாதாரண விஷயங்களின் தனித்துவத்தை,. அதே நேரத்தில், அந்த தனித்துவமானது எவ்வாறு உலகளாவிய தன்மையைக் கொண்டுள்ளது என்பதையும் காட்டுகிறது.

வசந்தகால மழை—
நதியை மடிக்கிறது
ஒரு எலி
- இஸ்ஸா

## 6. அசாத்தியம்

இந்த உலகம் மிகவும் வியக்கத்தக்க வகையில் மர்மமாகவும் அழகாகவும் சோகமாகவும் இருக்கிறது, ஏனெனில் அது தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. எதுவும் நீடிப்பதில்லை, எல்லாம் மாறும் நிலையில் உள்ளது. அசாத்தியத்தின் உண்மை குறைவதில்லை, மாறாக ஒவ்வொரு விஷயத்தின் தனித்துவத்தையும், ஒவ்வொரு நபரையும் மேம்படுத்துகிறது. வாழ்க்கை மிகவும் விலைமதிப்பற்றது, ஏனென்றால் அது மிகவும் அழகாக இருக்கிறது. ஹைக்கூ கவிஞர்கள், வேறு எந்த எழுத்தாளர்களையும் விட, இந்த உலகின் இடைக்கால தன்மை குறித்து நிருபர்களாய் இருந்து அறிக்கையிடுகிறார்கள்.

உரம் தயாரிக்க
திரும்புகிறார்
செர்ரி  மர உரிமையாளர்
- உட்சு

## 7. இயல்பான தன்மை

ஜென் மற்றும் ஹைக்கூ இரண்டிலும் அலங்காரமற்ற, பகட்டற்ற மற்றும் சூழல் பற்றிய மதிப்பேற்றம் உள்ளது. ஹைக்கூ

எழுதும் போது, யாராலும் கவனிக்கப்படாதவை, ஓர விளிம்புகளில் கூட என்ன இருக்கிறது என்பதையும் , அன்றாட வாழ்க்கையின் சலசலப்பில் மக்கள் அவ்வளவு எளிதில் தவறவிடுவது குறித்தும் கவனம் செலுத்துகிறோம். இயல்பான தன்மை என்பது இயற்கையோடு ஒன்றிப்பது, பருவங்கள் மற்றும் நம்முடைய சொந்த மாறும் சூழ்நிலைகளுக்கு இசைவாக இருப்பது.

தீ மூட்ட போதுமான
உதிர் இலைகள் கொண்டு வருகிறது
அந்தக் காற்று
- ரியோகன்

## 8. கவனிப்பு

ஒரு நாள் ஒரு சாதாரண மனிதர் இக்கியுவிடம், «"எஜமானரே, தயவுசெய்து உயர்ந்த ஞானத்தின் சிலவற்றை எனக்கு எழுதுவீர்களா?" என்று கேட்டார். இக்கியு உடனடியாக தனது தூரிகையை எடுத்து கவனம் என்ற வார்த்தையை எழுதினார். "அவ்வளவு தானா?" என்று கேட்டார். "நீங்கள் இன்னும் ஏதாவது சேர்க்க மாட்டீர்களா?" இக்கியு பின்னர் கவனம் கவனம் என இரு முறை எழுதினர், "சரி," என்று அந்த மனிதர் எரிச்சலுடன் குறிப்பிட்டார், "நீங்கள் எழுதியவற்றில் நான் மிகவும் நுணுக்கத்தைக் காணவில்லை." பின்னர் இக்குயு அதே வார்த்தையை மூன்று முறை எழுதினார்: கவனம் கவனம் கவனம், என. கோபமடைந்த அந்த மனிதன், "அந்த வார்த்தை கவனம் என்ற வார்த்தைக்கு என்ன தான் அர்த்தம்?" என்று கோரினார். "கவனம் என்பது கவனத்தை குறிக்கிறது" என்று இக்கியு பதிலளித்தார். இந்த உரையாடல் இதைத்தான் சுருக்கமாகக் கூறுகிறது: ஹைக்கூ என்பது கவனம் செலுத்தும் கலை.

இனிப்பு சாறு
கத்தி முனையிலிருந்து சொட்டுகிறது
பேரிக்காய் உரிக்கையில்
- ஷிகி

## 9. துலங்குதன்மை

நாம்ஒருதுடிப்பானபிரபஞ்சத்தில்வாழ்கிறோம்,மறுமொழி கூற அழைக்கப்படுகிறோம். ஹைக்கூ எழுத்தாளர்களாகிய நாம் நமது எழுத்தின் மூலம் உலகிற்கு மறுமொழி கூறுகிறோம்.

ஹைக்கூ, விஷயங்களுக்கு இடையில் மறைந்திருக்கும் உறவை வெளிப்படுத்துவதன் மூலம், எல்லா உயிர்களின் அடிப்படை ஒன்றோடொன்று இணைந்திருப்பதை உறுதிப் படுத்துகிறது

சிறு தாவல் செய்கிறது
ஒவ்வொரு முறை அலை உடைகையில்
அண்டங்காக்கை
- நிஸ்ஸா

அண்டங்காக்கை அலைகளுடன் ஒன்றித்திருக்க, ஜென் குணங்களின் பட்டியலில் நாம் தொடங்கிய இடத்திற்குத் திரும்புகிறோம்.

*குறிப்பு : இந்த கட்டுரை மார்ச் 4-6, 2005 இல் வெலிங்டனில் உள்ள ஹைக்கூ திருவிழா ஆட்டெரோவாவில் Richard von Sturmer அவர்களால் வழங்கப்பட்ட ஒரு முழுமையான அமர்வின் சுருக்கப்பட்ட பதிப்பாகும்,*



## ஜென் கதை

# பணம் காய்க்கும் செடி

– அருணாச்சல சிவா



ஒரு யோகி ஊருக்கு வெளியே குடில் அமைத்து வாழ்ந்து வந்தார். அவர் பணத்தை கையால் கூட தொடமாட்டார். தனக்கான உணவுக்கு காய் கனிகளை தானே விளைவித்து தற்சார்புடன் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்துவந்தார்.

அவரைப் பார்க்க நண்பர் ஒருவர் குடிலுக்கு வந்தார். அவர் கையில் ஒரு மூலிகைச் செடியின் தொட்டி வைதிருந்தார், நண்பரை சந்தித்த மகிழ்வில் யோகி நன்றாக வரவேற்று உபசரித்தார். தான் இயற்கையில் விளைவித்த காய் கனிகளைக் கொண்டு அவருக்கு உணவு சமைத்து பரிமாறினார்.

நண்பர் மகிழ்ந்து விடைபெற்று செல்லும்போது தன் கையிலுள்ள மூலிகைச்செடியை யோகிக்கு பரிசாக அளித்தார். யோகி அந்த பரிசை வாங்க மறுத்துவிட்டார்.

«நீ பணமாகக் கொடுத்தால் தானே வாங்க மாட்டாய். இது அரியவகை மூலிகைச்செடி. இதைக்கூட ஏன் வாங்க மறுக்கிறாய்», என்று நண்பர் கேட்டார்.

«இது அரியவகை மூலிகைச்செடி என்பதால் தான் வாங்க மறுக்கிறேன். இந்த மூலிகைச்செடியை அடைய ஆசைப்பட்டு சிலர் என்னிடம் பணம் கொடுக்கலாம். சிலர் திருடிச்செல்ல முயற்சி செய்யலாம். நாளை நான் மறுத்தால் அவர்கள் என்னை துன்புறுத்தவும் தயங்க மாட்டார்கள். மேலும் இந்த அரியவகை மூலிகைச்செடி என்னிடம் இருக்கிறது என்ற கர்வம் கூட எனக்கு

வரலாம். எனவே இது இயற்கையாய் இருந்தாலும் என் யோக சாதகத்துக்கு பங்கம் விளைவிக்ககூடியதாய் இருப்பதால் இது எனக்கு வேண்டாம். அப்படியே தேவைப்பட்டால் நான் காட்டில் போய் தேடிப் பறித்துக்கொள்கிறேன்», என்றார் யோகி.

“தேடுவது சுகம். சுலபமாய் கிடைத்தால் அரியதற்கும் மதிப்பில்லை”, என்று கூறி முடித்துவைத்தார் யோகி.

காய்ச்சல் கண்ட மான்
படுத்து உறங்குகிறது
வேப்ப மரத்தடியில்.
- அருணாச்சலசிவா



## ஹைபுன்

-கவிச்சாரல் காமராஜ் மாரியப்பன்
கொள்ளிடம் காமராஜ்,
திருச்சிராப்பள்ளி - 621 216.

லாகூர் ஸ்டேஷன். இரவு எட்டு மணி இருக்கும். ஒரே கூட்டம். டில்லி செல்லும் ரெயில் கிளம்புவதற்கு இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கும். அப்போது அங்கே அவசர அவசரமாக ஓடி வந்தான் ஒரு கிராமவாசி.

அவனுக்கோ ரெயிலைப் பிடிக்க வேண்டுமென்ற அவசரம். ஒவ்வொரு மூன்றாம் வகுப்புப் பெட்டியாகப் பார்த்துக் கொண்டே வந்தான். எதிலும் ஏறமுடியவில்லை. கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஏற்கனவே உள்ளே ஏறி உட்கார்ந்து

கொண்டிருந்தவர்கள் கதவைப் பூட்டிக் கொண்டு விட்டார்கள்.

யாரையும் உள்ளே விடவில்லை. அந்தக் கிராமவாசி எவ்வளவோ கெஞ்சி கேட்டுக் கொண்டும் ஒருவருக்கும் மனம் இரங்கவில்லை.

ஒரு போர்ட்டரின் உதவியால் அவ் வண்டியில் பயணித்தான் அந்தக் கிராமவாசி. எப்படியோ வண்டியும் புறப்பட்டது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நின்று கொண்டே பயணித்த காரணத்தினால் கிராமவாசியின் முகத்திலே அளவு கடந்த சோர்வு காணப்பட்டது.

ஒரு பயணிக்கு அந்த கிராமவாசியைப் பார்த்து என்ன தோன்றியதோ தெரியவில்லை. "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

அந்தக் கிராமவாசியும் சற்றுத் தயக்கத்துடன் தன் பெயரைக் கூறினான். அந்தப் பெயரைக் கேட்டதும் அங்கே நின்றிருந்தவர், உட்கார்ந்திருந்தவர், படுத்திருந்தவர் அனைவருக்கும் தூக்கி வாரிப் போட்டது. திடுக்கிட்டுப் போய் மரியாதையுடன் அனைவரும் எழுந்து நின்றனர். ஒதுங்கி நின்று அவருக்கு உட்கார இடம் கொடுத்தனர்.

அந்தக் கிராமவாசி வேறு யாரும் இல்லை! காந்தி அடிகள்தான்!

கடுஞ்சொல் பேசாதவர்
காட்சிக்கு எளியவர் காந்தியெனச்
சோதித்தறிந்தனர் நாட்டுமக்கள்..!

- கவிச்சாரல் காமராஜ் மாரியப்பன்

- மரத்தை வெட்ட
  உயர்ந்து வருகின்றது
  அடுக்கு மாடி

- அடுக்குமாடித் தூணின் நிழலில்
  கண்ணயர்ந்து தூங்குகின்றது
  மரநிழல் தேடிய நாய்

- நாள்  முழுவதும் தொடர்ந்தது
  வாகனத்தின் குறுக்கே விழுந்த
  நாயின் நினைவு



**- ஷர்ஜிலா யாகூப்**

- உரங்கள் விலை
  அதிகரித்துக் கொண்டே இருக்கிறது
  இயற்கை விவசாயம்

- தேர்தல் திருவிழா
  வெற்றி நடை போடுகிறது
  தடுப்பூசித் திருவிழா



**~ க. குணசேகரன்**

- கவிழ்த்து வைத்தால் போதாது
  உடைத்துப் போடு
  மதுக் கிண்ணத்தை

- பெயர் மாற்றச்சொல்லி
  கொடி பிடித்தது
  ஜாதிமல்லி

- எனக்கு முன்பாக
  கடந்து செல்லும் நிழல்
  நகரும் விளக்கு

- விதைத்த நெல்லுக்குள்
  புதைந்துள்ளது
  முளைத்தலின் முனைப்பு

- மரங்களை வளர்த்தேன்
  எதிர்பார்க்கவில்லை
  குயில் பாட்டு

- குடை விரித்தும்
  வியாபாரி வெய்யிலில்
  தள்ளி விழும் நிழல்

- வண்டி செய்யும்முன்
  தலைதெறிக்க ஓடுகின்றன
  மரத்திலிருந்து விழுந்த பனங்காய்கள்

**- கா.ந.கல்யாணசுந்தரம்**



●

மிதக்கும் சருகு
சட்டெனக் கடந்து போகும்
மேகக் கூட்டம்

●

தாமரையிலைத் தண்ணீர்
தாலாட்டிய படி இருக்கும்
குளத்துச் சிற்றலைகள்

●

உடைந்த கூரை
அவசரமாய் வெற்றிடம்  நிரப்பும்
சிலந்தி வலை

●

நீலப் போர்வை
அழகாய் காட்சி தரும்
மலைத்தொடர்

●

ஆழமான பள்ளத்தாக்கு
தொட்டுத் திரும்பி வருகிறது
ஓவியனின் தூரிகை



- தமிழ்நெஞ்சம் அமின்
பிரான்ஸ்



- தனிமரம்
  தோப்பானது
  விதை பரப்பிய பறவைகள்!

- நேசன் மகதி



- ஆணி அறைந்த தடத்தை
  அழகாக மாற்றியது
  சுவர் ஓவியம் ...!

- ஹிஷாலி



- விழும் இலை
  விடாமல் பிடித்திருக்கும்
  மரத்தின் வாசம்

- தட்சணாமூர்த்தி



- எல்லையை தாண்டுகிறது
  வனவிலங்குகள்
  பொய்தானே

- க. மகேந்திரன்

- கிளையிலிருந்து மீண்டும்
  தன் தாய் வீட்டை வந்தடைகிறது
  உதிர்ந்த இலை.

- ராஜிலா ரிஜ்வான்



- நாட்டின் முதுகெலும்பு விவசாயி
  சத்துணவை விளைவிப்பவருக்கு
  பழைய சாதமே அமிர்தம்

- பொன்னி



- கணவன் மனைவி சண்டை
  பிரியாமல் இருக்கிறது
  நேற்று துலக்கிய பற்குச்சிகள்

- கவி யுக கமல்.



- மதுக் கிண்ணத்தில்
  மோதி விழுகின்றது
  மனைவின் பார்வை

- ஈழவன் தாசன்



கோடிட்டே
நிரப்பி வருகிறாள்
குளம் வரையும் மகள்.

கட்டுச்சோறு
மெல்ல அவிழ்க்கிறேன்
மனைவியின் கைகோர்ப்பை.

நனைந்த குருவி
ஈரமாக இருக்கிறது
ஒதுங்கிய இடம்.



- பா.சிவா

எருமை முதுகில்
கொக்குச் சவாரி
வெள்ளைத் திமிர்

- வெற்றிப்பேரொளி



* கழுத்தில் விழுகிறது மாலை
கைத்தட்ட முடியவில்லை
கலங்குகிறது ஆடு.

* சுமையோடு கழியும் பகல்
நினைத்தாலே இனிக்கிறது
பசியற்ற இரவு



* சொர்க்கம் ஆகாசத்தில் இல்லை
அருகில்தான் இருக்கிறது
தாய்மடி

* சுவாசிக்கத் திணறுகிறேன்
புல்லாங்குழலாக மாறுகிறது
மூங்கிலின் பெயர்

- ஐ. தர்மசிங்



- கீழடி அகழாய்வு
பார்க்க பிரமிப்பாய் இருக்கிறது
உறை கிணறு

- சுற்றும் பம்பரம்
விரைவில் நிற்கப் போகிறது
சிறுவர்களின் மகிழ்ச்சி பாட்டு.

- முதுமையிலும் காதல்
மெல்ல எட்டிப் பார்க்கிறது
காதோரம் நரைமுடி

- மாடியில் மல்லிகைத் தோட்டம்
எப்போதும் மணம் வீசுகிறது
மனைவியின் கூந்தல்

- கூடிய மழை மேகங்கள்
விரும்பாமல் கலைந்து போகிறது
விளையாடிய சிறுவர் கூட்டம்



- கவிநிலா மோகன்

- ஊரை நெருங்க
நன்றாக தெரிகிறது
பாட்டி வீடு.

- நாட்டின் அவலம்
நன்றாய் பிரதிபலிக்கிறது
தேர்தல் களத்தில்



- வைகை பாரதி

- வெட்டப்பட்ட பனைமரத்தின்
மூச்சுக்காற்று வீசுகிறது
பனையோலை விசிறியில்.

- எப்படிச் சொல்வது காக்கையிடம்
நான் நாத்திகன் என
அமாவாசை தினத்தில்

- குபேரன் பாஸ்கர்



●
உணர்ந்தேன்
விழிகளின் புத்துணர்ச்சி
கண்தானம்

- குமரன் அம்பிகா



•
கதிர் கொத்தும் பறவை
சலனமின்றி நிற்கிறது
காவல் பொம்மை.

•
மீன் கொத்தி
அலைகைக் கூர் தீட்டுகிறது
என்னாகுமோ சிக்கும் மீன் ?

•
இதமான மரநிழல்
படுக்க காதில் விழுகிறது
சருகுகள் உருளும் ஓசை

•
தாகம் தணிக்கும் முன்
கால் நனைக்கிறது
நீரருந்தும் பறவை

•
விழுந்தால் தான்
உயரமாக எழ முடிகிறது
மரத்தின் விதை



**- பொம்மிடி மோகன்தாஸ்**

●

ஓடி முடித்ததும்
ஆரத் தழுவுகிறது
நதியைக் கடல்

●

மகளிர் தின விழா
அதிகாலையிலேயே செல்கிறாள்,
சமையலறைக்கு

●

மேடையேறிய தலைவர்
நிற்க முடியவில்லை,
மக்கள் மனதில்

●

வசந்த காலம்
மரத்திலிருந்து உதிர்கிறது,
குயில் ஓசை!

- அன்ஸார் எம்.எல்.எம்.



●

வரலாறு வகுப்பில்
உலகப்போர்கள்
ஜன்னலில் புறா.

●

முள்ளில் நுழைக்கப்பட்ட
மண்புழு துடிக்கிறது
எப்படி சொல்வது மீனுக்கு

●

கட்டிலில் படுக்கிறேன்
நினைவில் அமர்கிறது
மரத்திலமர்ந்தப் பறவை.

●

வீடே மணக்கிறது
விற்ற ஊதுவர்த்தி
உணவின் நறுமணம்.

●

அசையாதிருக்கும் மரம்
பள்ளி வளாகத்தில்
தேசிய கீதம்.

●



கண்ணேறு கழிதல்
அமோக விளைச்சல்
எலுமிச்சை தோப்புக்கு

- துரை நந்தகுமார்

●

வெட்டுப்பட்ட மரம்
விழாமல் நிற்கின்றது
பறவையின் சிறகு..!

●

கிராமத்துப் பண்பாடு
மாறாமல் இருக்கின்றது
ஒற்றுமை உணர்வு..!

●

வேட்டையாடும் மிருகம்
களைத்துப்போய் நிற்கிறது
தப்பிய மான்..!

- ஜெயச்சந்திரன்.ப



●

இரவு வேளையில்
அதிகம் குறைகிறது
ஆற்றங்கரையில் மணல்



- சரவிபி ரோசி சந்திரா



- ஏணி
  சாய்த்த பின்தான்
  நிலாவை பார்த்தேன் நான்

**- க .புனிதன்**

- சந்தையில் வியாபாரி
  கூவிக் கூவி நடத்துகிறார்
  சேவல் விற்பனை.



**- ம.கமலக்கண்ணன்.**

- அரிவாள்மீதமர்ந்தும்
  ஆபத்தில்லை  பறவைக்கு!
  அய்யனார் மகிமை?

**- ஸ்ரீதர் கிருஷ்ணசாமி**

- பலரின் தலைவிதி
  வகுப்பறையில் தீர்மானிக்கப்படுகிறது
  வாக்குச்சாவடி

**- பொன்னம்பலவாணன்**



- திறக்கப்படாத பள்ளிகளால்
  சுதந்திரமக வளர்கின்றன
  மரங்கள்

- கட்டட உயரத்தை
  விரும்புவதே இல்லை
  வீட்டு விலங்குகள்

- தார் சாலையால்
  தேய்ந்து போனது
  வண்டி மாடுகள்

கலை செல்வன்,
கடலூர், இந்தியா.



- முதுமையிலும் உழைப்பு
  விடாமல் தொடர்கிறது
  குடும்ப வறுமை

- கோடையில் மழை
  மகிழ்வைத் தருகிறது
  சிறுவர்களின் ஆட்டம்

- பால்யப் பருவம்
  சட்டென நினைவுக்கு வருகிறது
  நதியோரக் குளியல்

- சுற்றுலாத் தலம்
  ரசிக்கும்படி இருக்கிறது
  சாரல் மழை

**கலாராணி லோகநாதன்**



●

நான்கு அடுக்கு பாதுகாப்பு
பூரித்து மகிழ்ந்தது
ஓட்டுப் பெட்டி.



●

வெட்கப்பட்டு தலை குனிகிறது
பொய் பிரச்சாரத்தால்
ஒலிபெருக்கி.

●

ஓங்கிய கைகள்
பணிந்து தொடர்ந்து கும்பிடுகிறது
ஓட்டுவேட்டை

**- பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து**



●

மழை நீர்
கடலில் கலக்கிறது
எனது வறுமையின் கண்ணீர்

●

வரப்பில் இறங்கி
வயலை ரசிப்போம்
விவசாயிகளைக் காப்போம்

**- சா. கணேஷ் குமார்**

●
வரப்பில் பணியாட்கள்
வயலில் அறுவடை ஆரம்பம்
கதிரறுக்கும் எந்திரம்...!

●
கருவுற்றிருக்கும் பெண்
தருகிறாள் பிரசவத்தில் இரண்டாய்
பிள்ளையுடன் ஒருதாய்...!



●
பார்க்கிறார் வயதானவர்
பம்பரம் சுற்றும் பிள்ளைளை
சுழலும் நினைவலைகள்...!

●
குளமெங்கும் மீன்கள்
பசி அடங்குவதில்லை பார்த்து
மரக்கிளையில் குரங்கு...!

- செண்பக ஜெகதீசன்

●
நதிக்கரை
ஓரமாய் ஓய்வெடுக்கின்றன
நனைந்த சருகுகள்



**காவத்தையூர்**
**பழனியாண்டி கனகராஜா**

•

விழுந்த மறுகணமே,
பயணத்தை தொடர்கிறது,
உதிர்ந்த சருகு.

•

நுரையீரல் கருகும்
வாசமா இது
நிகோட்டின் நெடி.



•

வளர்ப்பு சரியில்லை,
ஒதுக்கி வைக்கிறேன்,
குன்றிய செடிகளை.

•

வீடு கட்டிய தாத்தா,
ஓய்வெடுக்கிறார்,
முதியோர் இல்லத்தில்.

- அய்ஷத்அப்சத்



●
ஆயுளை நீட்டிக்க
மருத்துவரை நாடினார்
சோதிடர்..

●
குறுக்கே செல்கிறது
தனக்கான நேர்வழியில்
பூனை..

●
ஆர்ப்பரிக்கும் அலை
மவுனமாய் நடக்கும்
சுண்டல் சிறுவன்..



- மகிழ்நிலாவின் தந்தை



●

ஓடிய நதி திரும்பிப் பார்த்தது
காணாமல் போனது தடங்கள்
மணல் கொள்ளை

●

விதைத்ததைத் தானே
அறுவடை செய்ய முடியும்
தேர்தல்...

●

விழியின் விலாசத்தில்
விடியலைத் தேடினாள்
வயிற்றுப் பசியோடு

●

அக்கினி குஞ்சிருக்கு
அடுப்பும் இருக்கு
உலை கொதிக்க அரிசி இல்லை

**- த. ஆ. தாசன்**

இருண்ட மை
வெளிச்சத்தை தருமா
வாக்காளரின் நம்பிக்கை.

சகலமும்
இழந்ததாய் தோன்றுகிறது
துணைவி மறைவு.

குப்பையில் புதிதாய்
வாழ்க்கை தொடங்கியது
சிந்திய தானியம்.

திருடன்
தொலைத்துவிட்டுத் தேடுகிறான்
கள்ளச்சாவி.

திருமண விழா
நிறைந்த சிரிப்பொலிகள்
கண்ணீருடன் அப்பா.

**- மு. மணி திருமுருகன்**



எத்தனை முறை எம்பினாலும்
அலைகளுக்கு கிடைப்பதில்லை
பஞ்சுமிட்டாய் சுண்டல்

அலைகளிடம் பேசியதை
ஒப்பித்தது கடற்காற்று
சங்குகளிடம்.

நிரம்பி இருக்கும்
தானிய கிடங்கின் வெளியே
பசியோடு உறங்கும் யாசகன்.

பருத்தி விவசாயி மகனை
வேலைக்கு அழைத்துக் கொண்டது
பனியன் கம்பெனி

வேட்புமனு அளிக்காமல்
அனைவர் பாதங்களையும் தொடுகிறது
கடல் அலைகள்.

**- லோக. சந்திரபிரபு**





●

நாத்திக பேருந்து ஓட்டுநர்
பக்தர்களை அழைத்துச் செல்கிறார்,
புனிதத் தலங்களுக்கு.

●

லாபம் ஈட்ட முடியாத
வெற்றிலை வியாபாரி,
வாடி வதங்கிப்போனார்

●

மசூதியில் குடியிருந்த புறாக்கள்
தேவாலய வளாகத்தில் இரையெடுத்து,
கோயில் குளத்தில் நீரருந்தின.

●

ஏழையின் ஓட்டைக் கூரை
மழை நீரை சேகரித்தது,
சேதாரமின்றி.

- ஆ.சார்லஸ்



•
கருவோடு பிறந்து
கல்லறையோடு மறையும்
துணையான நிழல்

•
மலையில் மோதியும்
பறவைக்கு சேதமில்லை
அதன் நிழல்

•
சிறு மேகம்தான்
பெரிதாக நகர்கிறது
தரையில் நிழல்

•
மரத்தடியில் இளைப்பாற
உடனே மறைந்து போகிறது
துணைவந்த நிழல்

•
நூறு அடிகள் என்கிறேன்
மகள் நடந்ததாகச் சொல்கிறாள்
இருநூறு அடிகள்

**- கவியாசகன்**



- கூழாங்கல்
முழுவதிலும்
நதியின் வாசம்..!

- நதியிலசையா கூழாங்கல்
பாசிகளைச் சுத்தப்படுத்தும்
அயிரை மீன்கள்..

- காய்ந்த நதிப்படுகை
சரஞ்சரமாக அடுக்கப்பட்ட
கூழாங்கற்கள்..!

- சொட்டாங்கல் விளையாட
நதி தத்துவமும் கூழாங்கற்கள்
ஒவ்வொன்றுக்கும் ஒரு நிறம்..!

- கூழாங்கற்கள் சேகரிக்க
மேலே வந்து பார்க்கும்
மீன் குஞ்சுகள்..!

- **ஆர். ஜவஹர் பிரேம்குமார்**

●

ஒற்றையடிப் பாதை
வளைந்து நெளிந்துச் செல்கிறது
கட்டெறும்புகள்

●

அறுவடை முடிந்த வயல்
இன்னும் அழகாகும்
புறாக்கள் வருகை...

●

வீதிகள் தோறும்
தன்னைத்தானே அழித்துக்கொள்கிறது
யாருமற்ற வீடு...



\- **ப. விஜி**

●

வசந்த காலம்
மனதுக்கு வேதனை தரும்
குயிலின் சோககீதம்

●

குளிரும் இரவு
நிலவை இறுக்கிப் பிடித்திருக்கும்
இலையுதிர்த்த மரக்கிளை

●

குழிந்த கன்னம்
முத்தத்தால் மீள் நிரப்பப்படும்
பிரிவின் இடைவெளி

●

உலவும் மயில்
வேதனை தந்து செல்லும்
வெட்டப்பட்ட தோகை

●

பூக்காத மரம்
கொத்துக் கொத்தாகத் தொங்கும்
வெளவால் கூட்டம்



**- வஃபீரா வஃபி**
**இலங்கை**

- குவளையில் தண்ணீர்
  குடிக்க மனமில்லை
  தோட்டத்திலாடும் மரக்கன்று!

- கொளுத்தும் வெயில்
  வீட்டுக்குள் முடங்காதீர்கள்
  மரங்களை நேசிப்போம்!

- படிக்கவே இல்லை
  பாட்டியிடம் கச்சிதமாயிருக்கும்
  வரவுசெலவு!

- ஏரோட்டும் அப்பாவின்
  வியர்வைத் துளிகளில் அப்படியே
  விதைகளின் சாயல்கள்!



**- ஹைக்கூ உமா**

- பேருந்திற்கான காத்திருப்பு
  நிழல் தருகிறது
  விளம்பர பதாகை

- மாணவர்களில்லை
  துக்கம் அனுஷ்டிக்கிறது
  கரும்பலகை



**- வைகைபுத்திரன்**

குழந்தை அழுகிறது
பசி தீர்க்கின்றாள் தாய்
பட்டினி வயிறுடன்..

முதியோர் இல்லம்
தனிமையில் வருந்தும் முதியவர்
வளாகத்தில் குட்டிகளுடன் பூனை.

தியாகத்தின் விலை
இன்று புதிய சேர்க்கை
முதியோர் இல்லம்

பந்தை உதைக்கும் சிறுவன்
சாக்கடையில் விழுகிறது
நிலவின் நிழல்

மாதத்தின் முதல்வாரம்
வீட்டு வாசலில் வரிசையாக
இலக்கியச் சிற்றிதழ்கள்



- சாரதா சந்தோஷ்

• தடுமாறும் குழந்தை
தாங்கிப் பிடிக்கும்
தாயின் அன்பு

• கல்லெறிந்த மரம்
உதிர்ந்துவிழும்
வசைச் சொற்கள்



- கன்னிக்கோவில் இராஜா

• சுமை தூக்கும் தொழிலாளர்
பாரமாகக் கருதவில்லை
மார்பில் குழந்தை

• உழைத்த களைப்பு
மறைந்து போனது
குழந்தையின் முத்தம்.



- இராஜா. ரமேஷ்



அலைபாயும் நினைவுகள்,
என் பள்ளிச் சீருடை
பார்த்த பின்பு

நினைவுகளின் ஆழம்,
நிகழ்காலம்
மறந்துபோனது

மீள்கவிதை படைக்கும்
வானம்,
வெயிலும் மழையுமாய்

நீள்கவிதை நிலாவாம்,
பூந்தோட்டங்கள் மாயம்
கவிதைகளுக்கு

பூஞ்சிட்டுக் குருவி,
அலைபாயுது
தண்ணீருக்கு

**மு.இரா.சாமியப்பன்**



- ச. ப. சண்முகம்

பசுமை போர்த்திய
இம்மரத்தில்தான் கேட்கிறது
பெயரறியாத பறவையின் குரல்.

பசுமை திரும்பி விட்டது
இனிமேல் கதைகள் பேசும்
மரத்தடி.

வெயிலுக்கு ஒதுங்குகிறேன்
இசைத்துக் கொண்டிருக்கிறது
நெகிழிப்பையில் வண்டு.

ஐந்து வினாடிக்குள்
பல கோணங்களில் பார்க்கிறது
வந்தமர்ந்த சிட்டு.

●

கூப்பிய கைகளை
கீழே போடவே இல்லை.
தூக்கத்திலும் வேட்பாளர்.

●

ஞாபகமாய் வாங்கினான்
நாய்க்கு கோழி பிரியாணி
பாட்டி பட்டினி

**- சிவானந்தம்**





●

உரத்த குரலில்
வசந்தத்தின் பாடல்
குயிலோசை.

●

மைதானத்தில் ஆட்டம்
களைகட்டிக் கொண்டது
துடுப்பாட்டப்போட்டி.

**- நயினைமைந்தன்**

●
பூமியைப் பிளந்து
எறும்பிற்கு வாழ்வளிக்கிறது
வேர்பிடித்த மரம்.

●
இறைக்காத கிணற்றில்
மேலெழும் குமிழ்
பச்சை நிறத்தில் உடைகிறது

●
செடியை நெருங்கும்
தடித்தக் குரல்
உதிர்ந்து விழுகிறது பூ.

●
பசுமையான வயல்வெளி
விதையிட
முந்தி நிற்கிறது களை.

**- கவி. விஜய்**





● பயண நெடுஞ்சாலையில்
பழம் விற்கும்
பிஞ்சு வியாபாரி.

**- க. பார்த்திபன்**, சிங்கப்பூர்

●
கரடி பொம்மை
கட்டிப் பிடித்து அழுகிறது
வாங்கச் சொல்லும் குழந்தை

●
அமாவாசை வரட்டும்
முழுவதுமாய் எண்ணிவிடுகிறேன்
இந்த மின்மினிகளை

●
கலைத்து விடாதீர்கள்
கனவோடு தூங்குகிறான்
கலாமின் சீடன்

●
இன்னும் ரசிக்க வேண்டும்
நாளையும் வருமா
நிலவு...



**த.யாசகன்**



புதிதாக வேலைக்கு சேர்ந்தவன்
'துரு துருன்னு' இருக்கான்
இரும்புக் கடையில்..

**- மலர் மைந்தன். குமார்**

•
பழமையான மரம்
காற்றை தடுக்கிறது
கதவுகளாய்.

•
பசுமை போர்த்திய வயல்
வெண்மைக்கு என்ன வேலை
ஓ இரைதேடும் கொக்கு.

**- மணவை கார்னிகன்**



•
மரங்கள்
பல்லாண்டு வாழ்கின்றன
தாத்தாவின் நாற்காலி.

•
விவசாயி நெல்லை
காற்றில் தூற்றினான்
பதருடன் உழைப்பும் பறந்தது.

**- பழ கவி**

●
பட்டுப் போல் விரித்தது
உறங்கும் நினைவுகளை...
பனை கிலுகிலுப்பை.

●
கூரையில்லா வெளி
முகவரி தேடுகிறார்
வீடற்றவர்.



**- செஞ்சோலை**



மலர்ந்தும் மலராத
மலரின் மொட்டு தான்
ஒரு தலைக் காதல்.

**- த. ரவீந்திரன்.**



பாரம் தாங்கவில்லை
தலைச்சாய்ந்த புல்லின் நுனியில்
பனித்துளி

**- நாகி. ஆர். ராஜேந்திரன்**

●
யானை இறங்கியதும்
நிறம் மாறியிருக்கிறது
நெல் வயல் ...

●
மயானத்தை நெருங்குகிறது
இறுதி ஊர்வலம்.
வழியில் பலவித கால்தடங்கள்.

●
மகளிர் விடுதியில்
புதுப்பிக்கும் பணி நடக்கிறது.
கண்கலங்க பிரியும் தோழிகள் !



**- நல முத்துகருப்பசாமி**

●
முள் மீதமர்ந்து தவம்
முடித்து உயிரை மாய்த்தது
பனித்துளி...

●
மழையில் மூழ்கி குளித்ததும்
கரையில் ஒதுங்கி விட்டது
இலை...



**- சாக்ரடிஸ்**



சாவியைத் தொலைத்த பாப்பா
அடி வாங்குகிறது
பூட்டு.

- ம. செ. விஜயகுமார்



நதியில் படகு
பின்னோக்கி ஓடுகின்றன
கரையோர மரங்கள்.

- அன்பு துரைசாமி



மறைந்து கொள்ள ஆசைப்பட்டது,
முள்ளின் நுனி,
பனித்துளி வழியே தெரிகிறது,

- மு. நஜர் அகமது



மீன்கொத்திப் பறவை
நீரில் மூழ்கி எழுகிறது
நதியோர நாணல்!!

- நாகலெட்சுமி இராஜகோபாலன்



உதிரும் சருகுகளின
நிழலில் படபடக்கும்
பட்டாம்பூச்சி.

- பாலமுரளி

- இலக்குகளைத் தாண்டி,
  தப்பிப் பிழைக்கிறது...
  இராணுவவீரர் வாழ்க்கை

- வெறுங்கைகள்,
  முழம் போடுகின்றன...
  இலவச நோய்கள்!

- இடத்தைக் கொடுக்கிறோம்
  மடத்தைப் பிடுங்குகிறார்கள்
  கடனில் மூழ்கும் தமிழகம்



- ராஜூ ஆரோக்கியசாமி

- தொடருந்திற்குத் தெரியாது
  நாளும் தன்னைச் சுமக்கும்
  இருப்புப்பாதையின் முதுகுவலி..!

- தன்னைப் பற்றிய
  கருத்துகளில் காயப்படுவதில்லை
  நூலகத்திலுள்ள நூல்கள்

- பருத்தி எடுப்பவளை
  வருத்தி எடுத்ததுக்
  கோடை வெயில்..!



- கொள்ளிடம் காமராஜ்

●
நெகிழ்ந்த மண்ணில்
பதிந்த காலடி
அழகிய சிற்பம்

●
சீண்டும் குயில்
தடுமாறும் காகம்
இனப் போராட்டம்



- அன்புச்செல்வி சுப்புராஜு



மாறாத புன்னகையுடன்
அருகில் அப்பா
பத்திரமாய்ப் புகைப்படத்தில்

- இளவல் ஹரிஹரன்



ஒரே வரிசை
பல எண்ணங்களோடு
வாக்காளர்கள்,,,!

- நாகை ஆசைத்தம்பி



டிசம்பர் பூவின்
மொட்டை ரசிக்கையில்
மெல்ல மலர்கிறது ஜனவரி

- முனைவர் வே. புகழேந்தி

## லிமரைக்கூ

●

குழந்தை செய்யும் வீம்பு
அது புரியாமல் செய்கின்ற ஒரு
விளையாட்டு என்று நம்பு...!!

●

மழலை எனும் அரும்பு
மயக்கும் பலரை தன் செயலால்
அது செய்வதெல்லாம் குறும்பு..!!



- அனுராஜ்

●

சாலையின் நடுவில் பள்ளம்
மறந்து விடாமல் நிரப்பிச் செல்கிறது
பெய்யும் மழையின் வெள்ளம்



- க. சோமசுந்தரி

## நூல் அறிமுகம்: அம்மா பின்னிய கூடை

இந்த நூலின் ஆசிரியர் லோக. சந்திரபிரபு கும்பகோணத்தில் வசிக்கின்ற கவிஞர். இவர் சுழற்சங்கத்தில் (ரோட்டரி கிளப்) பல்வேறு பதவிகளில் சேவையாற்றி வருவ தோடல்லாமல் சிறந்த எழுத்தாளரும் ஆவார். கல்கி வார இதழில் “ஆன்மாவைத் தேடி” எனும் கட்டுரையால் தமிழகம் அறிந்த எழுத்தாளர். தமிழக கிராமங்கள் பலவற்றுக்குப் பயணம் செய்து அவற்றின் முக்கியத்துவத்தை கட்டுரை வடிவிலே தந்து கொண்டிருக்கும் மகத்தான சேவை செய்து வருகிறார். இவரது பயண அனுபவம் மட்டுமல்ல கூர்நோக்குப் பார்வையால் விளைந்த சிறந்த ஹைக்கூ கவிதைகள் “அம்மா பின்னிய கூடை” நமக்கு அள்ளியள்ளித் தருகிறது.

* மீனின் அழுகையா
மீனவனின் வியர்வையா
கடலின் கரிப்பு?

* கிழிந்த சீருடை
தைத்தது
மாணவன் வறுமை

* நதிகள் இணைந்துதான்
இருக்கின்றன
விவசாயிகளின் கண்களில்

* தேநீர் அருந்தும் போது
நினைவில் நிற்கின்றன
இலை பறித்த கரங்கள்

வார்த்தை ஜாலங்களைக் கையாண்டு, அடுக்கு சொற்கட்டு களைக் கொண்டு எழுதப்படுவது அன்று ஹைக்கூ கவிதைகள். எளிய சொற்களால், உள்ளது உள்ளபடியே எடுத்துக் கூறி, மனதில் பல்வேறு சிந்தனைகளை உருவாக்கம் கொடுப்பதே சிறந்த ஹைக்கூ கவிதைகள். இத்தகைய அகன்ற பார்வையுடன் எழுதப்பட்ட ஹைக்கூ கவிதைகள் கவிஞர் லோக.சந்திர பிரபு அவர்களின் “அம்மா பின்னிய கூடை” ஹைக்கூ நூலில்நிரம்பவே இருக்கின்றன. இனிய நந்தவனம் பதிப்பகம் மிக நேர்த்தியாக வண்ணப் பக்கங்களில் அச்சிட்டு வடிவமைப்பு செய்துள்ளது. அனைவரும் படிக்கவேண்டிய புத்தகம்.



கா. ந. கல்யாணசுந்தரம்

நூல் வேண்டுவோர் ...
Rtn. லோகசந்திர பிரபு
கைப்பேசி: +91-9344301219



# கவிக்கோ நினைவு ஹைக்கூ விருது - 2021

## சிறந்த ஹைக்கூ நூல்களுக்கு ரூ.22 ஆயிரம் பரிசுத் தொகையுடன் விருது

தமிழில் முதன்முதலாக ஹைக்கூ கவிதை எழுதியதோடு, அதைப் பரவலாகவும் அறியச் செய்தவர் கவிக்கோ அப்துல்ரகுமான். வரும் ஜூன் 2-ஆம் தேதி கவிக்கோவின் 4-ஆம் ஆண்டு நினைவு தினம்.

இதனையொட்டி, ஹைக்கூ கவிஞரும் இளம் தொழில் முனைவருமான சேத்துப்பட்டைச் சேர்ந்த கவி.விஜய், உலகு தழுவிய தமிழ் ஹைக்கூ கவிதை நூல்களுக்கான போட்டி ஒன்றினை அறிவித்துள்ளார்.

- 2018, 2019, 2020 - ஆகிய மூன்று ஆண்டுகளில் வெளியான நூல்களின் 3 பிரதிகளை வரும் மே- 20-க்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.
- **POD** எனப்படும் ஜெராக்ஸ் நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் போட்டியில் ஏற்கப்பட மாட்டாது.
- ஒரு கவிஞரே எத்தனை நூல்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- முதல் பரிசு ரூ. 10 ஆயிரம் - இரண்டாம் பரிசு ரூ. 5 ஆயிரம் - மூன்றாம் பரிசு ரூ. 3 ஆயிரம் - நான்கு நூல்களுக்கு ஆறுதல் பரிசு தலா ரூ.1000
- ஆரணியில் வரும் ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ள கவி.விஜய்-யின் ஹைக்கூ நூல்கள் வெளியீட்டு விழாவில் விருதுகள் வழங்கப்படும்.
- நூல்களை அனுப்ப வேண்டிய முகவரி : அகநி வெளியீடு,
  எண்: 3, பாடசாலை வீதி, அம்மையப்பட்டு, வந்தவாசி - 604 408,
  திருவண்ணாமலை மாவட்டம்.
- தமிழகத்தின் மூத்த ஹைக்கூ கவிஞர்கள் நடுவர்களாக இருந்து, விருதுக்கான நூல்களைத் தேர்வு செய்வர்.
- கூடுதல் விவரங்களைப் பெற அழையுங்கள் : **+ 91 96004 56606**



தமிழ்நெஞ்சம்

&

உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்

இணைந்து வழங்கும் ”ஹைக்கூ திண்ணை”